DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.188/2022

**prosecution witness: LW-6 as PW-3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேந்திரன் | தொழில் | : எலக்ட்ரீசியன் |
| த/பெ. | : ஆறுமுகம் | வயது | : 50 |
| ஊர் | : மண்டபம் | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

29.12.2025

( எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை,)

முதல் விசாரணை:-

1. நான் தற்போது மண்டபத்தில் உள்ள மறவர் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தனியாக எலக்ட்ரிக்கல் தொழில் செய்து வருகிறேன். சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு நள்ளிரவில் நான் பாம்பனில் வேலையை முடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் மண்டபத்தில் உள்ள எனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது பாம்பன் பாலம் இறக்கத்தில் உள்ள தோணித்துறை அருகே சென்று கொண்டிருந்தபோது மேற்கொண்டு சுமார் 4, 5 பேர்கள் சேர்ந்து சண்டை போட்டுக்கொண்டிருந்த சத்தம் கேட்டது. நான் அதை பார்த்துவிட்டு ஏதோ சண்டை போடுகிறார்கள் என்று கேள்விப்பட்டு தெரிந்து கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.12.29 17:59:20 +0530

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.188/2022

**prosecution witness: LW-4 as PW-2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஸ்டீபன் ராஜ் | தொழில் | : பெட்ரோல் பங்க் வேலை |
| த/பெ. | : அமல்ராஜ் | வயது | : 30 |
| ஊர் | : மண்டபம் | சமயம் | : கிறிஸ்துவர் |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>29.12.2025</u>

( எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை,)

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்போது மண்டபத்தில் உள்ள மீனவர் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் மண்டபம் சம்மாட்டியில் உள்ள பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளான ஷா நவாஸ் யை எனக்கு அடையாளம் தெரியும். அதுபோல் அ.சா.1 சுமனையும் எனக்கு தெரியும். அவர் வாடகை கார் ஓட்டுனர் என்று தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை இரவு சுமார் 12.00 மணி இருக்கும்போது நான் வேலை செய்துகொண்டிருக்கும் பெட்ரோல் பங்க் அமைந்துள்ள இடத்திற்கு எதிரே உள்ள மெயின் ரோட்டில் சுமார் 4 பேர்கள் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் அங்கு போய் பார்த்தபோது சுமன் ஓட்டிச் சென்ற வாடகை காரின் சாவியை அதில் பயணம் செய்த 4 பேர்கள் பிடுங்கி வைத்துக்கொண்டு பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து மண்டபம் போலீசார் அங்கு வந்து கார் சாவியை வாங்கி சுமனிடம் கொடுத்து காரில் பயணம் செய்த 4 பேர்களை சத்தம் போட்டு காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி அறிவுத்தி சென்றார். இரவு நேரம் என்பதால் அந்த காரின் பதிவு எண் தெரியவில்லை. போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2025.12.29 17:59:24 +0530